அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 6/99(1)

எனது இல. ஆ/111/5/8-1
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
1999.05.25..மே மாதம்

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கும்,
திணைக் களத் தலைவர்களுக்கும்,

**உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு எரிபொருட்கள் வழங்கலும் அவ் வாகனங்களின் சாரதியாளர்களுக்கு மேலதிக நேர, இணைந்த படிகளை செலுத்தலும்.**

மேற்படி விடயம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட 1999.02.22 ஆந் திகதிய 6/99 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை பற்றி பல பிரிவுகளிலிருந்து ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் பின்வரும் ஆலோசனைகளின் படி செயற்படுமாறு தெரிவித்துக் கொள்கின்றேன்.

1. **உத்தியோகத்தர்களுக்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனங்களின் சாரதியாளர்களுக்கான மேலதிக நேரப் படிகளும் இணைந்த படிகளும்.**

உத்தியோகத்தர் ஒருவருக்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனமொன்றை செலுத்துகின்ற சாரதியாளரொருவருக்கு விசேட கடமையின் நிமித்தம் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள உச்ச எல்லையை கடந்து மேலதிக நேர, இணைந்த படிகள் கொடுபட வேண்டிய சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட அமைச்சுச் செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவு செய்யலாம். இக் கொடுப்பனவுக்கு

அங்கீகாரம் வழங்கும் போது மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகளை மீறாதிருப் பதில் செயலாளர்கள் பொறுப்பாக இருக்க வேண்டும்.

II. கௌரவ அமைச்சர்களின் அந்தரங்கச் செயலாளர்கள்/கூட்டிணைப்பு செயலாளர்கள் மற்றும் பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் களுக்கு எரிபொருட் படி செலுத்துதல்.

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 6/96 இன் 1ஆம் இணைப்பின் படி மேற்குறிப்பிட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு வெவ்வேறாக எரிபொருள் படி செலுத்தப்பட வேண்டியதுடன், அவர்களின் பிரயாணங்களுக்கான எரிபொருட் செலவுகளை அவர்களே செய்ய வேண்டும். அவர்களுக்கு இணைக்கப்பட்டுள்ள வாகனங்களுக்கு அமைச்சின் எரிபொருட் கட்டளைகள் மூலம் எரிபொருட்கள் வழங்கப்படலாகாது.

III. கௌரவ பிரதி அமைச்சர்களின் பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் படி

கௌரவ பிரதி அமைச்சர்களின் கூட்டிணைப்பு செயலாளருக்கு செலுத்தப் படுகின்ற அடிப்படையே பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தருக்கும் ஏற்புடை யதாகும்.

IV. அமைச்சுக்களைச் சேர்ந்த செயலாளர்களின் கூட்டிணைப்பு செயலாளர்களுக்குரிய மாதாந்த எரிபொருட் படி

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 6/99 இன் 1ஆம் இணைப் பின் 1(இ) இன் கீழுள்ள எரிபொருட் படி ஏற்புடையதாகும்.

V. இவ் எரிபொருட்படி இளைப் பாறுகைப்பு நிதிக்கு உதவு தொகை செலுத்துவது தொடர்பில் கணக்கெடுக்கப்படுமா இல்லையா என்பது பற்றிய நிலைமை.

இவ் எரிபொருட் படி இளைப்பாறுகைக்கும் நிதிக்கு உதவு தொகை செலுத்துவது தொடர்பில் கணக்கில் எடுக்கப்படமாட்டாது.

பொதுத் திறைசேரியின் ஒத்திசைவுடன் இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகிற

(பீ.ஏ. சேனாரட்ன)
செயலாளர்
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்